# குமார வயலூர்க் கோயில்

# வரலாறு

திரிசிரபுரம் ஹீபர் ஹைஸ்கூல் தமிழ் ஆசிரியர்,

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று

குமார வயலூர் தேவஸ்தானம்

நிர்வாகத் தலைவர்

**திரு. N. மதுரமுத்துப் பிள்ளை அவர்கள்**

கௌரவ தர்மகர்த்தர்

**திரு. T. நடராஜ பிள்ளை அவர்கள்**

ஆகியவர்களால் வெளியிடப்பெற்றது

**தேவஸ்தான வெளியீடு**

2-வது பதிப்பு

சந்திரவிலாஸ் பிஞ்சராபோல் பிரஸ்,
பெரிய கடைவீதி, திருசிரபுரம்.
1944

...ப்யப்பெற்றது] [விலை 2 அணா

255 (6)



குமார வயலூர்க் கோயிலும் குளமும்.

# முன்னுரை.

முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனுக்குரிய கோயில்கள் பல உண்டு. அவைகளுள் வயல்கள் அயல் சூழ்ந்த வயலூர்ப்பதி ஒன்றாகும். இது சிறிய கோயிலாயினும் ஆன்றோருட் சிறந்த அருணகிரிநாதர் பேர் அருள் பெற்ற பெருங்கோயிலாகும். கோயிலுக்குச்செல்வோர் முதலில் கோயிலின் பெருமைகளை அறிந்து கொள்வது நலமாகும். சென்னை இந்துமத தர்மபரிபாலன பாது காப்புப் போர்டார் அனுப்பிய அறிக்கையின்படி இவ்வரலாறு எழுதப்பெற்றுள்ளது. கோயிலின் முன்னேற்ற விஷயத்தில் போர்டு தலைவர் திவான்பகதூர் - திரு T. M. நாராயணசாமிப் பிள்ளை, M. A., B. L. அவர்களும், கமிஷனர் ராவ்பகதூர் - திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L. அவர்களும் ஆவனபுரிந்து வருகின்றார்கள். தமிழ் ஆசிரியர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால் இது எழுதப்பெற்றுக் கமிஷனர் அவர்களால் அங்கீகரிக்கப்பெற்றது. முருகனைப்பற்றிய துதிப்பாடல்கள் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து முருகன் திருவருளைப் பெறுக.

குமார வயலூர்
தேவஸ்தானம்
1—9—1943

N. மதுரமுத்துப் பிள்ளை,
நிர்வாகத்தலைவர்.

---

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கோயிலும் இருப்பிடமும் | ... 2 |
| 2. | கோயிலின் அமைப்பு | ... 3 |
| 3. | மூர்த்திகளின் பெயர்கள் | ... 4 |
| 4. | கோயிலின் படம் | ... 5 |
| 5. | தீர்த்தங்கள் | ... 6 |
| 6. | சுற்றுக் கோயில்கள் | ... 6 |
| 7. | தலப் பெருமைகள் | ... 6 |
| 8. | வழிபட்டோர் | ... 7 |
| 9. | தினப் பூஜையும் திருவிழாக்களும் | ... 7 |
| 10. | திருப்பணிகள் | ... 8 |
| 11. | வருமானம் சொத்துக்கள் முதலியன | ... 9 |
| 12. | நிர்வாகம் | ... 9 |
| 13. | கல்வெட்டுக்கள் | ... 9 |
| 14. | சிற்பங்கள் | ... 12 |
| 15. | துதிப் பாடல்கள் | ... 13 |

# குமார வயலூர்க் கோயில் வரலாறு

" அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி."

## 1. கோயிலும் இருப்பிடமும்

குறிஞ்சி முதலிய நால்வகை நிலங்களில் மலைப் பகுதியாகிய குறிஞ்சிநிலத்துக்குரிய இறைவன், அன்றும் இன்றும் என்றும் குன்றாத இளையோனான குமரன் ஆவன். குமரக்கடவுளுக்குக் குறிஞ்சி நிலம் சிறப்பிடமாயினும், காடு, சோலை, ஆறு, குளம், சதுக்கம், சந்தி, மன்றம் முதலிய பிறவும் அவனுக்குரிய இடங்கள் ஆகும்.

" காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும் "

—திருமுருகாற்றுப்படை

குமரக்கடவுளுக்கு வழங்கும் பல பெயர்களில் முருகன் என்பது முன்னே நிற்கும். முருகு என்பது இளமை, அழகு, மணம், தெய்வத்தன்மை முதலிய பொருள்களைக் குறிக்கும். இவைகளையுடையோன் முருகனாவான்.

' மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி '—நக்கீரர்.

இவ்வுயர் குணங்களைப் பெற விரும்புவோர் முருகனை வழிபடுவர். எப்பொருளையுங் கடந்து அருவமாய் நின்ற இறைவன் உயிர்களுக்கு இன்பந் தந்து உய்விக்க வேண்டித் தன் உயர்ந்த நிலையிலிருந்து நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும், பஞ்ச பூதங்களின் வழியே படிப்படியாக இறங்கிப் பூமியில் உருவத் திருமேனியுடன் கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டு முருகன் முதலிய பல பெயர்களைப் பெற்று உலகெங்கும் மேவிய தேவாலயந்தோறும் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் செய்து வருகின்றான். இவ்வாறு புறத்தே கோயில் கொண்டு விளங்கும் பெருமான் அன்பினால் வழிபடும் அடியார்களின் அகத்தாமரையிலும் வந்து தங்கி அருள் செய்வான்.

தமிழ் நாட்டில் சைவ, வைணவத் தலங்கள் பல இருப்பதுபோலவே முருகனுக்குரிய பல கோயில்களும் ஆங்காங்கு ஆன்றோர்களால் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளுள் என்றும் வற்றாத நீர்வளமுடைய காவிரி நதி பாயும் சோழ நாட்டில் திருச்சிராப்பள்ளி ஜில்லா - திருச்சி தாலுகாவில் திருச்சி நகரத்துக்கு மேற்கே புத்தூர் மார்க்க மாக 6 மைல் தூரத்தில் குமாரவயலூர் என்னும் ஒரு சிறந்த தலம் உள்ளது. திருச்சி ரெயில்வே ஜங்ஷனிலிருந் தும், திருச்சி கோட்டை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்தும் புத்தூர், உய்யக்கொண்டான் மலை, சோமரசம்பேட்டை இவ்வூர்களின் வழியாக இத்தலத்தை அடையலாம். புத்தூர் வரையில் டவுன் பஸ் வண்டிகள் கிடைக்கும். அங்கிருந்து தனி வண்டியிலோ அல்லது நடந்து சென்றோ இவ்வூரை அடையலாம். ஜனத்தொகை சுமார் 500.

இத்தலத்திற்கு வயலூர், ஆதி வயலூர், மேலை வயலூர், வன்னி வயலூர், அங்கிபூஜித வயலூர், அக்கினீஸ்வரம் முதலிய பெயர்கள் வழங்கப்படுகின்றன. திருப்புகழ்ப் பாடல்களில் இத்தலத்துக்கு வயற்பதி, வயலி நகர், வயலி, செய்ப்பதி, மேலை வயலை என்னும் பெயர்கள் வழங்கு கின்றன.

இத்தலத்திற்குக் கிழக்கில் கீழ் வயலூரும், தெற்கில் அதவத்தூரும், மேற்கில் கொத்தட்டையும், வடக்கில் பேரூரும் எல்லைகளாக அமைந்துள்ளன.

## 2. கோயிலின் அமைப்பு

வயலூர் என்னும் பெயருக்கு ஏற்றபடி மருதநிலப் பகுதியாகிய வயல்களுக்கு மத்தியில் கோயில் அழகாக அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றிலும் தென்னந்தோப்புக் கள் மிகுந்துள்ளன. கோயிலுக்கு எதிரில் முன் மண்டப மும் திருக்குளமும் தேர் நிலையும் உள்ளன. தேர் நிலைக்குப் பக்கத்தில் பெரியதும் சிறியதுமான பல வேல்கள் நடப் பட்டுள்ளன. பிரார்த்தனைக்காரர்கள் மிகுதியாய் வந்து வழிபடுவர். கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. முன்னே ஒரு வாயிலும், அதனையடுத்து ஒரு கிணறும் வன்னி மரமும்

உள்ளன. அதற்குப் பக்கத்தில் புதிய கோபுரம் அமைந்த மற்ளுெரு வாயில் உள்ளது. கோயிலுக்குள் முன்னே சுவாமி சந்நிதியும், பக்கத்தில் அம்மன் சந்நிதியும் உள்ளன. சுவாமி சந்நிதிக்குப் பின்னே சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருக்கின்றூர். கோயிலுக்குள் ஒரு பிரகாரமும், வெளியில் தேரோடும் வீதியும் உள்ளன. உள்பிரகாரத்தில் அருணகிரிநாதர், விநாயகர், முத்துக்குமார சுவாமி, மகாலட்சுமி, சண்டிகேஸ்வரர், நவக்கிரகங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன. கோயில் மதிலின் அளவு தென்வடல் அடி சுமார் 87. கிழமேலடி சுமார் 320. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே சேர்க்கப்பட்டுள்ளது.


படத்திலுள்ள எண்களின் விளக்கம்

1. விநாயகர் சந்நிதி
2. முத்துக்குமாரசுவாமி
3. சுப்பிரமணியர் சந்நிதி
4. மகாலட்சுமி சந்நிதி
5. அருணகிரியார்
6. சுவாமி சந்நிதி
7. அம்மன் சந்நிதி
8. நவக்கிரகங்கள்
9. உள் கிணறு
10. கோபுர வாயில்
11. வன்னிமரம்
12. வெளி கிணறு
13. வெளி வாயில்
14. தேரடியான் கோயில்
15. திருக்குளம்
16. தேவஸ்தான காரியாலயம்
17. முன் மண்டபம்

## 4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தில் உறையும் சிவபெருமானுக்கு அக்நீஸ்வரர், குமாரபூஜிதநாதர், ஆதிநாதர் என்னும் திருநாமங்கள் வழங்கப்படுகின்றன. கல்வெட்டுக்களில் விடங்கப்பெருமான், மகாதேவர், திருக்கற்றளிப் பெருமானடிகள், மறப்பிலி என்ற பெயர்கள் காணப்படுகின்றன. தேவியாருக்குப் பூர்வஸ்திதிநாயகி, குமாரபூஜிதநாயகி, ஆதிநாயகி முதலிய பெயர்கள் சொல்லப்படுகின்றன. முருகப்பிரானுக்கு முத்துக்குமார சுவாமி, சுப்பிரமணியர், வயலூரான் வயலூர்க்குமரன், ஆதிவயலூரான் மேலைவயலூர்க் குமரன், ஆதிக்குமரன், வன்னிதலக் குமரன் முதலிய திருப்பெயர்கள் வழங்குகின்றன.

# கோயிலின் படம்.



## 5. தீர்த்தங்கள்

1. அக்னி தீர்த்தம். இது கோயிலுக்குக் கிழக்கில் உள்ள திருக்குளம். குமார தீர்த்தம் எனவும் பெயர் பெறும். இது புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

2. கோவிலுக்குள் உள்ள கிணறு.

3. உய்யக்கொண்டான் ஆறு இது ஊருக்குத் தெற்கில் கிழக்கு நோக்கி ஓடுகின்றது. தைப்பூசம், அமாவாசை, பங்குனி உத்திரம், ஆடி 18, ஆடி அமாவாசை முதலிய விசேட தினங்களில் சுவாமி புறப்பட்டு வந்து இவ்விடத்தில் தீர்த்தம் கொடுக்கும்.

## 6. சுற்றுக்கோயில்கள்

2-ம் பிரகாரத்தில் உள்ள கீழைப் பிள்ளையார் கோயில் மேலைப் பிள்ளையார்கோயில் என்ற இரண்டு கோயில்களும், கோயிலுக்கு எதிரில் தேரடியான் கோயிலும் உள்ளன.

## 7. தலப் பெருமைகள்

இத்தலம் இயற்கையழகும் செயற்கை அழகும் செறிந்த இடம். உடலுக்கு உணவைத்தரும் வயல்களும், ஆத்ம உணவாகிய பெருமான் எழுந்தருளிய கோயிலும் பொருந்திய தலம். கிருத்திகை, சஷ்டி முதலிய விசேட நாட்களில் மக்கள் மிகுதியாய் வந்து வழிபடுவர். 'இன்னே பெறுதி நீ முன்னிய வினையே' என்றவாறு வேண்டுவார் வேண்டுவதைப் பெருமான் அருள்வன்.

இத்தலத்தில் அருணகிரிநாதருக்கு முருகவேள் இரண்டாவது முறை வெளிப்பட்டு வந்து தரிசனந்தந்து பேரருள் புரிந்தனர் என்பதையும், இவர் விராலிமலையில் இருக்கும் பொழுது பெருமான் இவரை வாவென்றழைத்து அருள் புரிந்ததையும், இவரைத் திருப்புகழ் பாடல் பாடும்படி கருணை புரிந்ததையும், இவர் பாடிய திருப்புகழ்ப்பாடல்களாகிய அகச்சான்றுகளால் அறியலாம். இவைகட்கு ஆதாரமான திருப்புகழ்ப் பாடல் வரிகள் பின்வருவன:—

"செய்ப்பதிக்குள் எனைத் தடுத்தடிமைப் படுத்த அருள் பெருமாளே" என்று பழனியிலும், "வெளிப்பட்டெனையாள் வயலூரில் இருந்த வாழ்வே" என்று திருப்புக்

கோளியூரிலும், "விராலிமாமலையில் நிற்ப நீ கருதியுற்று வாவென அழைத்தென் மனமாசினையறுத்து ஞானமுதளித்த வாரமினி நித்தம் மறவேனே" என்று வயலூரிலும், "ஓதுகின்ற திருப்புகழ் நித்தம்பாடு மன்பது செய்ப்பதியில் தந்தவ நீயே" என்று ஆவினன்குடியிலும், "உயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பென எனக்கு அருள்கை மறவேனே" என்று துதிப் பாடலிலும் அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் இவர்க்கு முருகப்பிரான் அருள் செய்த பான்மையை அறிவிக்கும். இவருக்குத் தனிச் சந்நிதி உள்ளது.

விசேட காலங்களில் வெளியூர்களிலுள்ள பக்தர்கள் இத்தலத்துக்கு வந்து தங்கிப் பெருமானுக்குக் காவடியெடுத்து அபிஷேகம் முதலியன செய்வித்து அடியார்களுக்கு உணவளிப்பர். வேண்டுதல்காரர்கள் இவ்வூருக்கு வந்து முடி எடுத்து வழிபடுவர். இத்தலத்தில் திருமணங்களும் அவ்வப்போது நிகழ்வதுண்டு.

## 8. வழிபட்டோர்

திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், திருமகள், கலைமகள், இந்திராணி முதலிய தேவிகளும், சூரியன், சந்திரன், அக்கினி முதலிய முச்சுடர்களும் இத்தலத்துப் பெருமானைப் பூஜித்துப் பேறு பெற்றிருக்கின்றார்கள். அருணகிரிநாதர் முருகப்பிரானின் திருவருள்பெற்றுப் பல திருப்புகழ்ப் பாடல்களை இவ்வூரிலும் வெளியூர்களிலும் அமைத்துப் பாடியுள்ளார்.

## 9. தினப்பூஜையும் திருவிழாக்களும்

தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் மூர்த்திகளுக்கு அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. இவைகளையல்லாமல் அர்ச்சனைகளும், விசேட தினங்களில் மகாபிஷேகங்களும் பூஜைகளும் சிறப்பாக நடைபெறும்.

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறும். வைகாசி விசாக தினத்தில் பால் காவடி

ஊர்வலமாகப் புறப்பட்டு வந்து முருகப்பெருமானுக்கு அபிஷேகமும், ஆராதனையும் நடைபெறும். ஆனி மாதம் மூலநாளில் அருணகிரிநாதர் உற்சவமும், ஆவணியில் விநாயக சதுர்த்தி உற்சவமும், புரட்டாசியில் நவராத்திரி உற்சவமும், ஐப்பசியில் கந்தர் ஷஷ்டி உற்சவமும், கார்த்திகையில் தீப உற்சவமும், மார்கழியில் திருவாதிரை உற்சவமும் நடைபெறும். தை அமாவாசையிலும், மாசி மாதம் கார்த்திகை நாளிலும், பங்குனி உத்திரத்திலும் மகாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெறும். தைப்பூசம், பங்குனி உத்திரம், ஆடி அமாவாசை முதலிய விசேஷ தினங்களில் சுவாமி உய்யக்கொண்டான்நதிக்குப் புறப்பட்டுச்சென்று தீர்த்தம் கொடுத்துத் திரும்பும்.

## 10. திருப்பணிகள்

1. குகஸ்ரீ கிருபானந்தவாரி அவர்களுடைய பெரு முயற்சியால் பொதுவாக வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து சுமார் ரூ. 20,000-ல் புதிய இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. முதல் பிரகாரத்தில் தென் பக்கத்தில் அருணகிரிநாதரின் திருஉருவம் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கோயிலுக்கு வெளியே உள்ள திருக்குளம் செப்பனிடப்பட்டுச் சுற்றுச் சுவரும் படித்துறைகளும் புதிதாகக் கட்டப்பட்டன. கோயிலின் மதில் சுவர், மண்டபங்கள், கிணறு முதலியன பழுது பார்க்கப்பட்டன. இவைகள் யாவும் நிறைவேறி 18—6—1937-ல் மகா கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடைபெற்றது.

2 முருகன் சந்நிதிக்கு நேராக உள்ள நிலைக்கண்ணாடி பீடம் 1937-ம் ஆண்டில் அமைக்கப்பெற்றது.

3. மேற்படி கிருபானந்தவாரியாருடைய நன் முயற்சியினால் சுமார் ரூ. 2000 மதிப்புள்ள வைரமும், இரத்தினமும் இழைத்த வேல் ஒன்று புதிதாகச் செய்யப்பெற்று 6—10—1940ல் திருச்சியிலிருந்து ஊர்வலமாகக் கொண்டு வரப்பெற்று முருகப்பெருமானுக்கு அளிக்கப்பெற்றது.

### 11. வருமானம், சொத்துக்கள் முதலியன

இக்கோயிலுக்குச் சுமார் 23 ஏக்கர் நன்செய் நிலமும், 14 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. ஆண்டு தோறும் சுமார் ரூ. 3000 வருமானம் கிடைக்கும். மாதந் தோறும் இரண்டு பிரதோஷக் கட்டளைகள் நடைபெறுகின்றன.

#### வாகனங்கள்

ரிஷபம், மயில், அன்னம், ஆதிசேஷன், யானை, குதிரை, நந்தி முதலிய மரத்தாலாகிய வாகனங்களும், சூரன் சிலையும், சட்டத்தேரும் கோவிலுக்கு உள்ளன. பிரம்மோற்சவத்திலும், மற்ற விசேட நாட்களிலும் இவ் வாகனங்களில் சுவாமி எழுந்தருளி வெளியே பவனிவரும்.

#### திருவாபரணங்கள்

வைர இரத்தினவேல், கல்லிழைத்த பதக்கங்கள், கல்லிழைத்த திருமங்கலியம் ஆகிய ஆபரணங்கள் உள்ளன. புதிதாய்ச் செய்யப்பட்ட வெண்கலப்பாவை விளக்கு ஒன்று அருணகிரிநாதர் சந்நிதியில் உள்ளது. இவைகளின் மதிப்பு சுமார் 6000 ரூபாய்.

### 12. நிர்வாகம்.

இக்கோயிலின் ஆட்சி 1939-ம் ஆண்டுமுதல் சென்னை இந்துமத தர்ம பரிபாலன பாதுகாப்புப் போர்டு (Hindu Religious Endowment Board) நிர்வாகத்துக்கு உட்பட்டு நிர்வாக அதிகாரி ஒருவரின் மேற்பார்வையில் கோயில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. கௌரவ தர்மகர்த்தர் ஒருவர் உடனிருந்து உழைத்து வருகின்றார்.

### 13. கல்வெட்டுக்கள்

அக்னீஸ்வரம் என்று பெயர்கொண்ட இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் துரைத்தனத்தாரால் நகல் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் 1936-ம் ஆண்டில் 138 எண் முதல் 157 வரையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சில முடிவு பெறுமல் உள்ளன. சோழ அரசர்கள் காலத்தில் இப்பதி கேரளாந்தக வளநாட்டில் உறை

யூர்க் கூற்றத்து வயலூர் என்றும், தென்கரை பிரமதேயம் நந்திவர்மமங்கலம் என்றும் வழங்கப்பட்டுவந்திருக்கின்றது. சுவாமிக்கு விடங்கப் பெருமான், மகாதேவன், திருக்கற்றளிப்பெருமான் அடிகள், மறப்பிலி முதலிய பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இராஜகேசரிவர்மன். குலோத்துங்க சோழ தேவன், மதுரையும் ஈழமும்கொண்ட கோப்பரகேசரிவர்மன் - ராஜேந்திர சோழ தேவன், முதலாம் ராஜராஜ சோழன் முதலிய அரசர்கள் காலங்களில் நிலம், பொன், நெய் முதலியன கொடுக்கப்பட்டன. கோயில் பூஜைக்கும், நந்தா விளக்கெரிக்க்வும், நந்தவனந் திருத்தவும், பள்ளித்தாமம் தொடுக்கவும், திருப்பதிகம் பாடவும், திருவமுது, நெய் யமுது, கறியமுது, தயிரமுது, அடைக்காயமுது, தேன், பால், சர்க்கரை, பழம் முதலியன நைவேத்தியம் செய்யவும், ஆகிய இக்கைங்கரியங்கட்கு நிலம் முதலியன அளிக்கப்பட்டனவாகத் தெரிய வருகிறது. அவைகளில் கண்ட முக்கிய விவரங்கள் பின் வருமாறு :—

1. கோவிராஜராஜ கேசரி வர்மனுடைய 3-வதுஆண்டில் உறையூர்க் கூற்றத்து வயலூர் - விடங்கப்பெருமானுக்கு ஊரார் நிலம் விற்றுக்கொடுத்தது.

2. காந்தளூர்ச் சாலையில் கலம் அறுத்த கோவிராஜ கேசரி வர்மனுடைய (முதலாம் ராஜராஜசோழன்) 13-வது ஆண்டில் ஷை வயலூர்ப் பெருமானுக்கு ஊரார் நிலம் விற்றுக் கொடுத்தது.

3. ஊரார் கால்செய் நிலங்கொண்டு விளக்கெரிக்க 7 நாழி நெய் அட்டுக் கொடுத்தது. "இவ்விளக்கு ரக்ஷித்தார் பாததூளி என் தலைமேலன"

4. கோவிராஜகேசரிவர்மனுடைய 21-வது ஆண்டில் கோட்டத்து வயலூர் மகாதேவர்க்கு இரவும் பகலும் ஓர் நந்தா விளக்கெரிக்க ஊரார் இரண்டு செய் நிலங் கொண்டது.

5. குலோத்துங்க சோழதேவன் காலத்தில் கற்றளித்திரு அக்னீசுரமுடைய மகாதேவர்க்கு விளக்கெரிக்க நிலம் தேவதானமாக நிவந்தஞ்செய்து கொடுத்தது.

6. ஷை அரசனின் 7-வது ஆண்டில் உறையூர்க்கூற்றத்து வயலூர் திருக்கற்றளிப்பெருமான் அடிகளுக்கு நிலம் தேவதானமாக நிவந்தஞ்செய்து கொடுத்தது.

7. கோவிராஜகேசரி வர்மரின் 7-வது ஆண்டில் நந்தவனந் திருத்துவார்க்கும், பள்ளித்தாமம் பறித்துத் தொடுக்கவும் ஊரார் இறை நீக்கித் தேவதானமாக நிலம் நிவந்தஞ்செய்து கொடுத்தது.

8. காந்தளூர்ச்சாலையில் கலம் அறுத்த கோ.இராஜராஜ கேசரிவர்மனுடைய 11-வது ஆண்டில் பொன்கொண்டு நிசதம் இரு நாழி நெல் செலுத்த இருவர் ஒப்புக் கொண்டது.

9. "திருமகள்போல பெருநிலச் செல்வி மைபூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும் தடிகைபாடியும் குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும் எண்டிசை நிகழ்தர ஈழ...ண்டிரை வெற்றி தண்டாற்கொண்டு தந்நெழில்...பதகம் விளங்கும் யாண்டே செழியரை தேசுகொள்" ராஜராஜனுடைய 24-வது ஆண்டில் கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து வயலூர். திருப்பதியம் பாடுவார்க்கு ஊரார் நிலம் விற்றுக் கொடுத்தது. (இதில் முதலாம் ராஜராஜ சோழனுடைய கீர்த்தி விளங்கப்பட்டுள்ளது.)

10. கோவிராஜகேசரிவர்மனுடைய 7-வது ஆண்டில் ஊரார் இறைநீக்கித் தேவதானமாக நிலம் நிவந்தஞ்செய்து கொடுத்தது.

11. ஷை அரசனின் 7-வது ஆண்டில் இரவும் பகலும் ஒரு நந்தா விளக்கு எரிக்க ஊரார் இறை நீக்கித் தேவதானமாக நிலம் கொடுத்தது.

12. மதுரையும் ஈழமும்கொண்ட கோப்பரகேசரி வர்மனுடைய 41-வது ஆண்டில் தென்கரை பிரமதேயம் நந்திவர்ம மங்கலத்துத்திருப்பதியம்பாட சந்திரசேகரன் அரயைபிந்தனேன் என்பவன் நீருடன் அட்டிக்கொடுத்தது.

13. கோப்பரகேசரிவர்மன் -- ராஜேந்திர சோழ தேவனுடைய 4-வது ஆண்டில் திருக்கற்றளிப் பெருமானுக்குச் சாத்தியருளப் பொற்பூ அளித்தது.

14. ஷை அரசனின் 15-வது ஆண்டில் உறையூர்க் கூற்றத்து வயலூர்ப் பிராட்டியார்க்கு நிசதம் திருவமுது, நெய்யமுது, கறியமுது, தயிரமுது, அடைக்காயமுது இவை கட்கு நெல் அளித்தது. (அடைக்காய் - வெற்றிலை பாக்கு.)

15. ஷை அரசன் காலத்தில் நெய், தேன், பால், தயிர், திருவிளக்கு, சர்க்கரை, பழம் முதலியவைகளுக்கு ஊரார் நிலம் விற்றுக்கொடுத்தது.

16. மேற்படி அரசனின் 7-வது ஆண்டில் வயலூர்ப் பெருமானுக்கு இரவும் பகலும் ஓர் நந்தா விளக்கெரிக்க ஊரார் 7 கழஞ்சரைப் பொன்கொண்டு நிலம் தேவதான மாகக் கொடுத்தது.

17. மேற்படி அரசனின் 7-வது ஆண்டில் திருக்கற்றளிப் பெருமாளுர்க்கு ஊரார் நிலம் தேவதானம் செய்து கொடுத்தது.

18. திருபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவனின் 2-வது ஆண்டில் நிலம் சர்வமானியம் செய்தது.

19. கோவிராஜகேசரி வர்மனின் 6-வது ஆண்டில் வயலூர்ப் பெருமானுக்கு ஊரார் இறையிலியாக நிலம் விற்றுக் கொடுத்தது.

20. மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மனின் 7-வது ஆண்டில் வயலூர் உடையார் மறப்பிலிக்கு ஊரார் நிலம்விற்றுக் கொடுத்தது.

## 14. சிற்பங்கள்.

கோயிலுக்கு முன்புறம் புதிதாய் அமைக்கப்பட்ட ராஜகோபுரம் அழகிய திருஉருவங்களுடனும் 5-கலசங்களுடனும் 5-மாடங்களுடனும் விளங்குகிறது. கோயிலுக்

குள் விநாயகர் முதலிய சந்நிதிகள் அழகாக அமைக்கப் பட்டுள்ளன. சுவாமி கோயிலில் உள்ள நடராஜரின் உற்சவ உருவம் மற்றக் கோயில்களில் இருப்பதைப்போல் இல்லாமல் புது முறையில் அமைந்துள்ளது. அதில் திருவாசிகை இல்லை. இரண்டு பாதங்களும் பீடத்தில் பொருத்தப் பெற்றுள்ளன.

## 15. துதிப்பாடல்கள்

அருணகிரிநாதர் வயலூர்ப் பிரானைப்பற்றிப் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் பல. அவைகளில் சில பின்னே காட்டப்பெற்றுள்ளன. அல்லாமல் இவர் திருச்சிராப் பள்ளி, நாககிரி, விராலிமலை, திருவானைக்கா, திருச்செங் கோடு, திருஆவினன்குடி, திருப்புக்கொளியூர், பேரூர், திருப்பரங்குன்றம் முதலிய தலங்களில் வயலூரைவைத்துப் பாடியுள்ளார். தமக்குப் பெருமான் இப்பதியில் காட்சி தந்து அருள் செய்த முறையைக் குறித்துப் பழனி, விராலி மலை, ஆவினன்குடி, நெருவைநகர், திருப்புக்கொளியூர் முதலிய இடங்களில் அமைத்துப் பாடியுள்ளார்.

1 என்னால் பிறக்கவும் என்னா லிறக்கவும்
என்னால் துதிக்கவும் கண்களாலே
என்னா லழைக்கவும் என்னால் நடக்கவும்
என்னா லிருக்கவும் பெண்டிர் வீடு
என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் தொந்தநோயை
என்னா லெரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் இங்குநானார்
கன்னா ருரித்தஎன் மன்னா எனக்குநல்
கர்ணா மிர்தப்பதம் தந்தகோவே
கல்லா மனத்துட னில்லா மனத்துவ
கண்ணா டியிற்றடம் கண்டவேலா
மன்னான தக்கனை முன்னாள்மு டித்தலை
வன்வாளி யிற்கொளுந் தங்கரூபன்
மன்னா குறத்தியின் மன்னா வயற்பதி
மன்னா மூவர்க்கொரு தம்பிரானே.

2 தாமரையின் மட்டு வாசமலரொத்த
தாளிணை நினைப்பில் அடியேனைத்
தாதவிழ் கடுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்திய விராலி
மாமலையி நிற்ப நீகருதி யுற்று
வாவென வழைத்தென் மனதாசை
மாசினை யறுத்து ஞானமு தளித்த
வாரமினி நித்த மறவேனே
காமனை யெரித்த நீயன நெற்றி
காதிய சுவர்க்க நதிவேணி
கானி லுறைபுற்றி லாடுபணியிட்ட
காதுடைய அய்யர் குருநாதர்
சோமனொ டருக்கன் மீனுலவு மிக்க
சோலைபுடை சுற்று வயலூரா
சூடிய தடக்கை வேல்கொடு விடுத்து
சூர்தலை துணித்த பெருமாளே.

3 கடல்போற் கணைவிழி சிலைபோற் பிறைநுதல்
கனிபோற் றுவரிதழ் எழிலாகும்
கரிபோற் கிரிமுலை கொடிபோற் றுடியிடை
கடிபோற் பணியளை எனவாகும்
உடல்காட் டினிமையி லெழில்பாத் திரமிவ
ளுடையாற் கெறுவித நடையாலும்
ஒருநாட் பிரிவது மரிதாய்ச் சுழல்படும்
ஒழியாத் துயரது தவிரேனோ
குடலீர்த் தசுரர்க ளுடல்காக் கைகள்நரி
கொளிவாய் பல அலகைகள் பேய்கள்
கொலையோர் களமிசை தினமேற் றமரர்கள்
குடியேற் றியருக உயிர்தாழை
மடல்சீற் றினிலெழு விரைப்பூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனில் உறைவோனே
மலைமேற் குடியுறை கொடுவேட் டுவருடை
மகள்மேற் ப்ரியமுள பெருமாளே.

கந்தரலங்காரம்

4 பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்
விரும்புங் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள [கை
அரும்புந் தனிப்பர மாநந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே

—

5 நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

6 விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

## கந்தரநுபூதி

7 ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

8 திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே.

9 கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே.

10 உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

## கந்த புராணம்

11 மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற வீராறு தோள்போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

12 அருவமு முருவு மாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய.

## தனிப் பாடல்கள்

13 அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

14 முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

## நக்கீரர் அருளிய துதிமொழி (திருமுருகாற்றுப்படை)

15 நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ
இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டுஅமர் கடந்தநின் வென்றுஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில்!

16 அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
வழித்துணைவ னருளுங் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
யயிலெடுத்து வருஞ்செவ் வேளைச்
சந்திப்போ மலர்சொரிவோம் புகழ்ந்திடுவோ
மவன்கமலத் தாளுந் தோளும்
சிந்திப்போ மாதலினால் நமது பழ
வினைகளெல்லாஞ் சிந்திப் போமே.

ஆதிவயலூர் வெண்பா அந்தாதி — அமிர்தம் சுந்தரநாதம் பிள்ளை அவர்கள் இயற்றியது. (100-செய்யுட்கள்.)

17 எண்ணுமுகம் ஆறுடையாய் இன்கரமுந் நாலுடையாய்
நண்ணுவயலூர் முருகா நாயடியேன்—மண்ணுலகில்
வாழ்வுமதி யும்வளமும் வாய்க்கப்பெற் றெத்தகைய
தாழ்வுமுறா தோங்கவருள் தா.

18 காண்பானுங் காட்சியுங் காணப் படுபொருளும்
மாண்பான நீயாம் வணமுணர்ந்தேன்—சேண்டேடும்
ஆறு முகனே அணிவயலூர்க் கோனேஉன்
ஆறு முகமெற் கருள்.

19 பண்கனிந்த நக்கீரர் பாட்டேற்ற நின்செவிகள்
எண்கனிந்த என்புன்சொல் ஏற்றிடுமோ—விண்கனிந்து
பாடுபுகழ் பண்வயலூர்ப் பண்டிதனே வேல்முருகா
தேடுமெனக் கீவாய் திரு.

20 ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க.
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

இவ்வரலாற்றைப் படிப்போர் இதனுடன் சேர்க்கப் பெற்றுள்ள துதிப்பாடல்களையும் பக்தியுடன் பயின்று செவ்வேளின் சீரிய திருவருளைப்பெற்று இம்மை மறுமைப் பயன்களை அடைவார்களாக.